**செய்தியாளர்கள் சந்திப்பு**

செ.வெ.எண்: 340 நாள்: 3.5.2020

**புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு.**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (3.5.2020) புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் பி.கே.வைரமுத்து ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையின் பல்வேறு பணிகள் இன்றையதினம் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க தமிழகம் முழுவதும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் களத்தில் இருந்து பணியாற்றக் கூடிய முதல்நிலை பணியாளர்களான காவல்துறை உயர் அலுவலர்கள், காவலர்கள், தீயணைப்புத்துறையில் பணிபுரிய கூடிய அலுவலர்கள் மற்றும் காவலர்கள், உள்ளாட்சித்துறையில் பணியாற்ற கூடிய முதல்நிலை பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், மருத்துவத்துறையில் பணியாற்ற கூடிய முதல்நிலை பணியாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தும் வகையில் ஜிங்க் மாத்திரைகள், மல்டி வைட்டமின் மாத்திரைகள் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள்.

அந்த வகையில் தமிழகம் முழுவதும் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளை மேற்கொண்டு வரும் முதல்நிலை களப்பணியாளர்களுக்கு ஜிங்க் மாத்திரைகள் மற்றும் மல்டி வைட்டமின் மாத்திரைகள் தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழகத்தின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. இதேபோன்று இந்திய மருத்துவத்துறையின் சார்பில் ஆயுஸ் அமைச்சகம் பரிந்துரையின் படி உயர்மட்ட குழு கூடி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அளித்த பரிந்துரையின் படி இந்திய மருத்துவ கழகம் அங்கீகரித்து கபசுர குடிநீர் மற்றும் நிலவேம்பு குடிநீரும் முதல்நிலை களப்பணியாளர்களுக்கு முழுவதுமாக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் சென்னையில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள 1.50 லட்சம் பொதுமக்களுக்கு நேற்றையதினம் வரை கபசுர குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. முதல்நிலை களப்பணியாளர்கள் அனைவருக்கும் சத்தான உணவுகளை வழங்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேவையான நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் தேவையான உணவு உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலம் நிறைவேற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு அப்பணிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மத்திய குழு தமிழகத்தில் மருத்துவமனைகளை ஆய்வு மேற்கொண்டு நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள், சிகிச்சை முறைகள், நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுகள், சிறப்பு அரசாணை பிறப்பிக்கப்பட்டு தமிழகம் முழுவதும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் கொரோனா நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் ஒரே மாதிரியான உணவுகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளை ஆய்வு செய்து தமிழக அரசின் சிறப்பான செயல்பாட்டிற்கு பாராட்டு தெரிவித்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் பணியினை அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு தேவையான தடுப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் தமிழகம் முழுவதும் முதற்கட்டமாக 29,000 எண்ணிக்கையில் படுக்கை வசதியுடன் கூடிய விரிவான மருத்துவ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மருத்துவமனைகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் தயார் நிலையில் உள்ளது. மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களும் தங்குதடையின்றி தேவையான அளவு வழங்கப்பட்டு வருகிறது. எத்தகைய சூழ்நிலையையும் சமாளிக்கும் வகையில் அரசு தயார் நிலையில் உள்ளது. இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**